சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

சபரகமுவ மாகாண அரசசேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2021

----------------------------------------------------------------------------------------------------

1.0 2020.06.01 ஆம் திகதி முதல் ந டைமுறைப்படுத்தப்பட்டும் சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட சபரகமுவ மாகாண மொழிபெயர்ப்பாளர் பதவி – கள/அலுவலக அலுவலர் பிரிவு 1 சேவைத்தரத்திற்குரிய (MN6-2016) இன் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் , நடைமுறைகளுக்கு அமைய மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கு தகைமையான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 02 |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 02 |

2.0 இப் பரீட்சை சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய 15/90 ஏற்பாட்டிற்கு அமைய மாவட்ட மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இரண்டு மாவட்டங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களின் தகுதிக்கு ஏற்ப தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் , சபரகமுவ மாகாண அரச சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு தெரிவு செய்யப்படுவர்.

3.0 சம்பளம் **:** இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய மொழிபெயர்ப்பாளர் II தரத்திற்கான சம்பள வகுதி MN 6 -2016 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.36,585-10x660-11x755-15x930-ரூ.65,440/- ஆகும்.

4.0 தகைமைகள் : சபரகமுவ மாகாண அரச சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 கல்வித் தகைமை

4.1.1 <u>கல்வித் தகைமை : மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)</u>

I. கா.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத கணிதம் , சிங்களம் / தமிழ் மொழிகள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

II. இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடங்களில் கா.பொ.த (சா.த) பரீட்சையில் திறமை சித்தி பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேலான தகைமை பெற்றிருத்தல்.

மற்றும்

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் தமிழ் பிரதான பாடமாக உள்ளடக்கிய கல்விமானி பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

IV. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் முதுகலை பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும்.

4.1.2 <u>கல்வித் தகைமை : மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)</u>

I. கா.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத கணிதம் , சிங்களம், ஆங்கிலம் மொழிகள் உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கிலம் பிரதான பாடமாக உள்ளடக்கிய கல்விமானி பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் முதுகலை பட்டமொன்றை பெற்றிருக்க வேண்டும்.

4.2 தொழிற் தகைமை :

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணனி / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான 06 மாத கால கணனி பாடநெறி / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பாடநெறியினை பூர்த்தி செய்திருக்க வேண்டும். (NVQ Level 03)

4.3 ஏனைய தகைமைகள் :

சகல விண்ணப்பதாரிகளும் சபரகமுவ மாகாணத்தினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உளத் தகமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 ஏனைய தகைமைகள் :

I. விண்ணப்பதாரிகள் இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

III. 2021.08.15 ஆம் திகதி விண்ணப்பதாரி சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் , விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்திர வதிவிடமில்லை எனில் , விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : சகல விண்ணப்பதாரிகளும் உரிய சகல தகமைகளையும் 2021.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

5.0 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கும் விடயம் மற்றும் புள்ளிகள் :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயப்பரப்பு | புள்ளிகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்வுக்கு பரிசீலிக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| பகுதி I | 50 | 50 | |
| 1. மொழித் தேர்ச்சி | | (30) | |
| 1.1 விண்ணப்பிக்கப்பட்டுள்ள பதவிக்குரிய மொழிக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் மொழிபெயர்ப்பாளர் டிப்ளோமா பாடநெறி அல்லது அதற்கு மேலான மொழி பெயர்ப்புத் தகைமை பெற்றிருத்தல் | 15 | | |
| 1.2 விண்ணப்பிக்கப்பட்டுள்ள பதவிக்குரிய (சிங்களம்/ தமிழ்) (சிங்களம் / ஆங்கிலம்) அடிப்படை தகைமைக்காக சமர்ப்பிக்கப்படும் பட்டத்திற்கு உரிய மொழி தவிர்ந்த பதவிக்குரிய ஏனைய மொழி தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் டிப்ளோமா பாடநெறி அல்லது அதற்கு மேலான மொழி பெயர்ப்புத் தகைமை பெற்றிருத்தல். | 15 | | 20 |
| 2. கணனிக் கல்வி<br>அடிப்படை தகுதிகளுக்கு பொருந்தக் கூடிய கணனி அறிவினை விட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட / தகவல் தொழில்நுட்ப பாடநெறியினை பூர்த்தி செய்திருத்தல். | 10 | (10) | |
| 3. நேர்முகப் பரீட் சையில் காட்டப்பட்ட திறமை | 10 | (10) | |
| **மொத்த புள்ளிகள்** | 50 | | |
| பகுதி 2 | 50 | 50 | |
| 1.ஒரு உரை, உத்தியோகபூர்வ ஆவணம் அல்லது ஒரு அறிக்கையின் முக்கிய பகுதி மற்றும் ஒரு செய்தித்தாள் கட்டுரை அல்லது ஒரு பகுதியை பின்வரும் வழிகளில் மொழிபெயர்க்கவும் | | | |
| 01. சிங்களம்/ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு<br>1.1 சிங்களத்தில் இருந்து ஆங்கிலத்திற்கு<br>1.2 ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு | (50)<br>25<br>25 | (50) | |
| 02. சிங்களம்/தமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு | (50) | (50) | 20 |
| 2.1 சிங்களத்தில் இருந்து தமிழிற்கு<br>2.2 தமிழில் இருந்து சிங்களத்திற்கு | 25<br>25 | | |
| **மொத்த புள்ளிகள்** | 50 | | |

**குறிப்பு :**

இந்த கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டதுடன் , சித்தியடைவதற்காக குறைந்தபட்சமாக முதலாம் பகுதியில் 20 புள்ளிகளும் , இரண்டாம் பகுதியில் 20 புள்ளிகளும் பெற்றுக் கொள்ள வேண்டும்.
பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

6.0 பரீட்சைக் கட்டணங்கள் :

பரீட்சைக் கட்டணம் ரூ.1000/- ஆகும். சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். **<u>இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்க வேண்டும்.</u>** செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.

7.0 விண்ணப்பப்படிவம் :

A-4 அளவிலான கடதாசிகளை உபயோகித்து,

(அ). தொடரிலக்கம் 01 முதல் 04 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ). இல 05 முதல் இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலத்தினைக் கொண்டு தமது கையெழுத்தினாலே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(இ).விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் , தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சை கட்டணங்களைச் செலுத்திடாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாக அமையும்.பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும்.அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

7.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் , விண்ணப்பதாரி மேற்படி

பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாகவோ கருதப்படமாட்டாது.

7.2 விண்ணப்பதாரியின் கையொப்பம் , விண்ணப்பப்படிவத்திலும் , கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.எந்தவொரு நிறுவனத்தில் இருந்தும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி நிறுவனத்தின் தலைவர் அல்லது ,அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பத்தினைப் பெற வேண்டும். அவ்வாரல்லாத விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர் / ஓய்வுபெற்ற அலுவலர் / கிராம சேவக உத்தியோகத்தர்/ சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / பிரசித்த நொதாரிசு / முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் / அரச அல்லது மாகாண பொது சேவையில் நிரந்தர பதவியில் உள்ள பதவி நிலை அலுவலர் அல்லது விகாரையின் தலைமை பிக்கு குரு அல்லது குறிப்பிடத்தக்க பதவியில் உள்ள மத குருமார்கள் ஒருவரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

7.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2021.08.15 திகதி அல்லது அதற்கு முன்னர் “ செயலாளர் , மாகாண அரச சேவை ஆணைக்குழு, **சபரகமுவ மாகாண சபை , சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, புதிய நகரம் , இரத்தினபுரி** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

7.4 விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “சபரகமுவ மாகாண அரசசேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2021” மற்றும் நிரந்தர பதிவு மாவட்டத்தினையும் குறிப்பிட வேண்டும்.

8.0 விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை

II) செல்லுபடியாகின்ற கடவுச் சீட்டு

9.0 தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பிழையானது அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபடிக்கப்பட்டால் , அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும்.ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையான அல்லது தவறான தகவல் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.0 இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருத்து இருந்தால் , அது தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.சகல விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்ட திட்டங்களுக்கு அமைய இணைக்கப்பட்டுள்ளீர்கள்.

2021. 07.09 திகதி

சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி,
புதிய நகரம் , இரத்தினபுரி.

பீ.எஸ்.ஆர்.எம்.விஜயராஜ,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சபரகமுவ மாகாணம்.